உ

திருவையாறென்னும்

ஸ்ரீபஞ்சநதக்ஷேத்திர

ஸ்ரீகுஹாநந்த மண்டலியின்

ஸ்தாபகரும், அத்தியக்ஷருமாகிய,

பிரம்மஸ்ரீ,

அருட்கவி,

ந. சுப்பிரமணிய அய்யரவர்களால்

இயற்றப்பட்டது.

---

உரிமையுள்ளது] 1949 [விலை அணா 8

உ

# திருவையாறென்னும் ஸ்ரீபஞ்சநத க்ஷேத்திரதத்துவம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஓதியாரு மறிவாரில்லை யோதி யுலகெலாம்
சோதியாய் நிறைந்தான் சோதியுட் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடெரி காற்றுமாய்
ஆதியாகி நின்றானுமையாறுடை யையனே.

ஓதியஞானமும் ஞானப்பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியுமாவன விண்ணுமண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறுமொப்பன தூமதியோ
டாதியுமந்தமுமான ஐயாறனடித்தலமே.

நெஞ்ச மென்பதோர் நீள்கயந்தன்னுளே
வஞ்சமென்பதோர் வான்சுழிப்பட்டு நான்
துஞ்சும் போழ்து நின்னுமைத்திருவெழுத்
தஞ்சுந்தோன்ற வருளுமை யாறரே.

திருச்சிற்றம்பலம்.

**உ**லகத்தில் ஸகல ஜீவர்களும் “துக்கம் வேண்டாம் ஸுகமே வேண்டும்” என்றும், அந்த ஸுகமும்

"என்றைக்கும் அழியாமல் நித்தியமாய் இருத்தல் வேண்டும்" என்றும் விரும்புவது மிகப் பிரசித்தமே யாகும். என்றும் அழியாத இந்த நித்திய ஸுகத்தைத் தான் ஞான சாஸ்திரங்கள் மோக்ஷமென்றும், சிவனடி நீழலென்றும் கூறுகின்றன. இது சிந்தையும் மொழி யும் செல்லா நிலைமைத்தாகும். இது தத்துவஞானம் அல்லது சிவஞானமென்று கூறப்படும் பிரஹ்மவித்தை யொன்றினாலேயே யுணரப்படுவதாயிருக்கின்றது.

ஜீவப்பிரஹ்மைக்கிய வடிவ பிரஹ்ம வித்தை யானது பரமேச்வரனது இன்னருள் ஒன்றினாலேயே ஆன்மகோடிகளுக்குச் சித்திக்குமென்பது ஸகல சாஸ்திரங்களின் துணிபாகும். ஈச்வராநுக்கிரஹமானது ஈச்வரப்பிரணிதானமெனப்படும் சிவ வழிபாட்டினால் உண்டாவதாகும்.

ஈஸ்வரப்பிரணிதானம்;—

சிவஞான சாஸ்திரங்களைச் சற்குரு மூலமாய்ச் சிரவணம் செய்தல், பஞ்சாக்ஷரம், பிரணவம் முதலிய மஹா மந்த்ர ஜபங்கள், சிவ ஆராதனை, சிவஸ்தலவாஸம், உலகத்தைச் சிவவடிவமாய்ச் சிந்தித் துணர்தல், சிவன ருள் வாய்ந்த புண்ணிய தீர்த்தங்களிற் படிதல், விபூதி ருத்திராக்ஷதாரணம், சிவனடியார்களைப் பூசித்தல் முதலியன யாவும் ஈஶ்வரப்பிரணிதானத்திற் சேர்ந்தன வேயாகும். சிவப்பிரீதிகரமான எந்தக்கர்மாவும் ஈஶ் வரப்பிரணிதானமேயாகுமென்று சாஸ்திரங்கள் கூறு கின்றன.

சிவஸ்தலவாஸம்:—

"சிவனருட் டலத்தின்மேவல் தீர்த்த நீராடல் நித்தம்
சிவனடியார்கள் சேவை யவர்க்கனந் திருந்த வீதல்
சிவனடியார்க ளேவல் திருவுளங் களிப்பச்செய்தல்
சிவனடியார்க ளுண்ட பரிகல சேடங்கொள்ளல்,

கண்டிகை திருவெண்ணீறு கலந்தமெய் யடியார் வாரிக்
கொண்டிடத் தனங்களீதல் கூற்றுதைத்தவனையன்பால்
வண்டுசூழ் மலரிற்போற்றல் மழுவிடையவன்ற

ளுன்னல்

எண்டருசைவநூலினியல்பு மெய்யுணர்ந்து போற்றல்,
என்னுமீ ரைந்தினுள்ளும், சிவதலத்திருக்கும் பேறே
நின்மலவீடு சேர்க்கும்."

"சிவதலத்துறைதலொன்றே சைவமாம் வீடு சேர்க்கும்" என்னும் திருவாக்குக்களின்படி சிவஸ்தல வாஸமே நித்தியானந்தப் பெருவாழ்விற்கு நேர் சாதனமாமென் றேற்படுகின்றது.

எங்ஙனம், பாலானது பசுவின் சரீரமுழுமையும் வியாபித்திருப்பினும், அது, பசுவின் முலைக்காம்புகளின் மூலமாகவே கிரஹிக்கப் படுகின்றதோ, அங்ஙனமே, சிவம் உலகமெங்கும் வியாபித்திருப்பினும் சில தூய்மையான ஸ்தலங்களிற்றான் அச் சிவசைதன்னியம் நன்கு விளங்குகின்றது. இங்ஙனம் சிவசைதன்னியம் நன்கு விளங்கும் திருத்தலங்களுக்கு சிவஸ்தானங்களென்றுபெயர்.

உலகத்தில் இத்தகைய சிவஸ்தானங்கள் எண்ணிறந்தனவாயிருக்கின்றன; ஆயினும் அவை வேதாகமங்

களின் சித்தாந்தத்தின்படி எட்டேயாகும். அவையும் பிரிதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், யஜமானன் (ஜீவன்) என்பனவாகும்.

நிஷ்கள பரசிவம் மேற்கூறிய அஷ்டமூர்த்தங்களையும் தோற்றுவாயாகக் கொண்டு ஸகள ரூபத்தோடு விளங்கி, அநாதி மலத்தாற் கட்டுண்ட வுயிர்களுக்கு அருளபுரிந்து முத்தராக்குகின்றனனென்பது பரமசித்தாந்தமாகும்.

எங்ஙனம் அண்டமாகும் ஸ்தூலபாஹ்யப்பிரபஞ்சத்தில் அஷ்டமூர்த்தி ஸ்வரூபமாய்ச்சிவம் விளங்குகின்றதோ, அங்ஙனமே, ஸூக்ஷ்மப் பிரபஞ்சவடிவபிண்டமாகும் ஒவ்வொரு ஜீவனது சரீரத்தில் எட்டு ஸ்தானங்களில் சிவம் விளங்குகின்றதென்பது வேதாகமங்களின் துணிபாகும், அண்டபிண்டங்களுக்கு அபேதம் சாஸ்திர சித்தமாதலின்.

அண்டபிண்டங்களின் பிரிவினையின்படி அஷ்டமூர்த்தி ஸ்வரூபவிமர்சனமாவது:—

| அஷ்டமூர்த்தங்கள் | அண்டம் | பிண்டம் |
|---|---|---|
| 1. பிரிதிவி | காஞ்சீபுரம் | மூலாதாரம் |
| 2. அப்பு | ஜம்புகேஶ்வரம் | ஸ்வாதிஷ்டானம் |
| 3. தேஜஸ் | அருணாசலம் | மணிபூரகம் |
| 4. வாயு | காளஹஸ்தி | அநாஹதம் |
| 5. ஆகாசம் | சிதம்பரம் | விசுத்தி |
| 6. ஸூர்யன் | சூரியமண்டலம் | பிங்கலை |
| 7. சந்திரன் | சந்திரமண்டலம் | இடை |
| 8. யஜமானன் | திருவையாறு | ஆஞ்ஞை (சுழிமுனை). |

ஆகவே திருவையாறென்னும் பஞ்சநத க்ஷேத்திரமானது ஸ்தூல அண்டத்தில் யஜமான க்ஷேத்திரமாகவும், ஸூக்ஷ்ம பிண்டத்தில் ஆக்ஞாரூப மானஸ க்ஷேத்திரமாகவும் விளங்குகின்றதென்றேற்படுகின்றது. இதன் உண்மை தத்துவஆராய்ச்சியில் நன்கு புலப்படும்.

திருவையாறென்னும் ஸ்ரீபஞ்சநத க்ஷேத்திரமானது தஞ்சாவூருக்கு வடக்கே ஏழுமைல் தூரத்தில் இருக்கின்றது. இக்க்ஷேத்திரத்தின் மாஹாத்மியம் வடமொழியில், ஸ்ரீபிரஹ்மவைவர்த்த புராணத்தில் அந்தர்கதமாய், அறுபத்துநான்கு அத்தியாயங்களாக கூடி விளங்குகின்றது. இது ஒருசிறந்த ஜீவன்முக்தக்ஷேத்திரமாகும். இதன் மஹிமை ஸ்ரீ ஸூதஸம்ஹிதையிலும் நன்கு பிரதிபாதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ பிரஹ்மவித்தியாஸம்பிரதாயத்தில் வந்த குருவர்களும், உபநிஷத்துக்களில் பிரதிபாதிக்கப்பட்டுள்ளவர்களுமான வேதவியாஸர், துர்வாஸர், அகஸ்தியர், வசிஷ்டர், சதாநந்தர், சிலாதர், நந்திகேச்வரர், முதலிய பலரிஷிகளும், ஞானிகளும் இக்க்ஷேத்திரத்தில் வந்து வசித்து, வழிபட்டுச் சிவாநுக்கிரஹம் பெற்றிருப்பதாகப்புராணம் கூறுகின்றது.

புராணத்தின்படி இத்தலத்தின் விசேஷ அம்சங்களாவன:—

தீர்த்தங்கள்: காவிரி, சூர்யபுஷ்கரிணி.

பஞ்சநதங்கள்: கங்கை, சூர்யபுஷ்கரிணி, சந்திரக்கிரஹணத்தினின்றும் பெருகும் அம்ருதநதி

(பாலாறு). கௌரியின் முலைப்பால்நதி; நந்தியின் வாய்நுரையெனப்படும் விருஷபநதி என்பனவாகும்.

இறைவன் திருநாமம்: பிராணநாதார்த்திஹரன்; பஞ்சாபகேசன், செம்பொற்சோதி.

தேவிதிருநாமம்; தர்மாம்பிகை, தர்மவர்த்தினி, அறம் வளர்த்தநாயகி.

ஜப்பியேசுவரர்: மூலஸ்தானத்திற்குப் பின் பாகத்தில் நிருதி மூலைக்கும் மேற்குத்திசைக்கும் மத்தியில் (மஹாவிஷ்ணு ஸ்தானத்தில்) இருக்கின்றனர். ஜப்பியேசுவரமண்டபத்தில் ஆதிவிநாயகர், ஸூக்ஷ்ம பஞ்சபூதலிங்கங்கள், ஸப்தமாதர்கள் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளனர். ஜப்பியேசுவரர் ஸகலவிதமான மந்த்ரங்களின் ஜபஸித்தியை வெகு சீக்கிரத்தில் அருளுபவர். இம்மண்டபத்தில் விளங்கும் ஸூக்ஷ்ம பஞ்சபூதலிங்கள் அபஞ்சீக்ருத பூதலிங்கங்களாகும்.

ஸப்தஸ்தானங்கள்;

| | |
|---|---|
| திருப்பழனம்<br>திருச்சோற்றுத்துறை<br>திருவேதிகுடி<br>திருக்கண்டியூர்<br>திருப்பூந்துருத்தி<br>திருநெய்த்தானம்<br>திருவையாறு | இவற்றுள், திருப்பழனம் முதல் திருநெய்த்தானம் வரையுள்ள ஆறுக்ஷேத்திரங்களும் திருவையாற்றின் அங்கங்களாகும். |

சிலாதமுனிவர்; இவர் ஒரு மஹாதபஸ்வி. ஸ்ரீபஞ்சாக்ஷரஜபஸித்தியின்பொருட்டு பரமேஶ்வரனது கட்டளையின்படி திருவையாற்றிற்குவந்து, ஸ்ரீதுர்வாஸ மஹர்ஷியின் ஆக்ஞையின்படி கற்பொடிகளை யாகாரமாய்க்கொண்டு, ஸ்ரீ ஜப்பியேஶ்வரர் ஸந்நிதியில் அமர்ந்து ஜபம் செய்து மந்த்ரஸித்தியைப்பெற்றனர். கற்களை யாகாரமாய்க் கொண்டகாரணத்தால் இவருக்குச்சிலாதர் என்னும் காரணப் பெயரேற்பட்டது. இவர் வசிஷ்டரது தங்கையாகிய சாருலக்ஷணையை மணந்து சைலாதி யென்னும் புத்திரனைப் பெற்றனர்.

சைலாதர்:- இவரும் திருவையாற்றையடைந்து பரமசிவத்தைக்குறித்துத்தவமியற்றினர். அத்தவத்திற்குமகிழ்ந்து பரமேஶ்வரன் அவர்முன் தோன்றி, அவரது விருப்பத்தின்படி சிவஸந்நிதானத்தினின்றும் என்றும் விலகாத வரந்தந்தருளிச் சிவகணங்கட்கெல்லாம் தலைமையாய் விளங்கும் அதிகாரத்தையுந்தந்து, பட்டாபிஷேகம்செய்தருளினர். இவரது பட்டாபிஷேகத்திற்காகவேதான் பஞ்சநதங்கள் வருவிக்கப்பட்டன. இங்ஙனம் பட்டாபிஷேகம் செய்வித்துப் பரமேஶ்வரஸாரூப்பியத்தையும் ரிஷபமுகத்தையும்

'நந்திகேஶ்வரர்' என்னும் தீக்ஷா
நாமத்தையும், இரத்தினப் பிரம்பையும்
அருளிச்செய்து பரமசிவன் அந்தர்த்
தானமாயினர்.

பின்னர், நந்திகேஶ்வரர் வசிஷ்ட மஹர்ஷியின் பிர
பௌத்திரியும், வியாஸரது புத்திரியுமாகிய "ஸ்வஜை"
யென்னும் பெண்ணை மணந்தனர். இத் திருமணம் திரு
மழபாடியென்னுந் திருத்தலத்தில் பரமேஶ்வரனே முன்
னின்று செய்வித்ததாகப் புராணங் கூறுகின்றது. நந்தி
கேஶ்வரரது சரித்திரந்தான் இத்தலத்தின் சிறப்பிற்
கும், தத்துவ ஆராய்ச்சிக்கும் ஜீவாதாரமான விஷய
மாகும்.

அன்றியும், இத்தலத்தில் ஸுசரிதன் என்னும்
பிராஹ்மணகுமாரன் ஸ்ரீ வசிஷ்டமுனியின் திருவருளால்
பரமேஶ்வரரது கட்டளையின்படி நந்திகேஶ்வரரால்
மரணபய (யமபாச)த்தினின்றும் நீங்கி நித்தியத்துவத்தை
யடைந்ததாகப் புராணங்கூறுகின்றது. இயமனைச்சங்க
ரித்த நந்திகேஶ்வரரது திருவுருவமேதான் சிவாலயத்
தின் தெற்கேயுள்ள ஆட்கொண்டாரது திருவுருவமாகும்:

ஸ்ரீ பிரணதார்த்திஹரரது ஆலயத்தின் வடபாரிசத்தி
லும், தென்பாரிசத்திலும் முறையே, உத்தரகைலாஸ
மும் தக்ஷிணகைலாஸமும் இருக்கின்றன. இத்தலத்திற்
குரிய சிறந்த விஷயங்களுள் இதுவும் ஒன்றாகும். இவற்
றுள், உத்தரகைலாஸ மென்பது ஸுரதனென்னும் ஓா
ரசகுமாரன் பொருட்டும், தக்ஷிண கைலாசம் ஸ்ரீ வாகீச
ரென்னும் அப்பர் சுவாமிகளின் பொருட்டும் ஏற்பட்
டனவாகும்.

இதுகாறும், புராணங்கூறும் வண்ணம் ஸ்தூலமான (சரித்திர) கதாபாகம் கூறப்பட்டது. இனி இத்தலத்தின் தத்துவத்தை யாராயத்தொடங்குவாம்.

பஞ்சநதம்;—ஆக்ஞாஸ்தானமாகும் புருவமத்தி. இது மானஸிகக்ஷேத்திரம். இந்தஸ்தானத்தில் ஐந்து சிறு நதிகள் ஒருங்கே வந்து சேருகின்றன.

அவையாவன;—

(1) கங்கை;—ஸஹஸ்ரதள கமலமாகும் பிரஹ்மரந்த்ர ஸ்தானத்திலிருந்து கீழ்நோக்கப் பெருகும் சைதன்ய அம்ருததாரை.

(2) ஸுர்யபுஷ்கரிணி:—பிங்களை.

(3) சந்த்ராம்ருதநதி:—இடை.

(4) கௌரி மூலைப்பாலாறு:—கௌரி என்றால் வாக்காகும் வாக்கின் குசமண்டலம் மத்திமை; இது விசுத்தி சக்கிரத்திலுள்ளது. இதனின்று மேல் நோக்கியெழும் ஆத்ம கோசரவிருத்திக்குப் பாலாறு என்று பெயர்.

(5) ரிஷபநதி:— நந்தியின்வாய்நுரை; நந்தியென்பது பரிசுத்தஜீவன். நந்தியின்வாய் சுத்தாந்தக்கரணமெனப்படும். இத்தகைய அந்தக்கரணவிருத்தியே ரிஷபநதியாகும்.

மேற்கூறிய ஐந்து சிறுநதிகளும் புருவமத்தியாகும் ஆக்ஞாஸ்தானத்தில் ஒன்று சேருகின்றன.

சிலாதர்:—பிரிதிவிமுதலிய அனாத்ம ஜடப்பொருள்களாலேற்படும் (நாசத்தோடுகூடிய) விஷயசுகங்களையும், துக்கங்களையும் அநுபவிக்கும் ஜீவன் சிலாதர் ஸ்ரீதர்

வாஸ மஹர்ஷியின் சொற்படி கற்களைத் தூளாக்கித் தின்றுகொண்டு ஆத்மப்ரஹ்மைக்கிய அகண்டார்த்தத்தோடு கூடிய ஸ்ரீமத்பஞ்சாக்ஷரமஹாமந்த்ரத்தை யநுஸந்தானம் செய்து பரமசிவாநுக்ரஹமாகும் பரமபுருஷார்த்தத்தைப் பெற்றனர்.

பிரிதிவி முதலிய பாஞ்சபௌதிகப் பிரபஞ்சத்தின் விஷய ஸுகங்களைப் பஞ்ச ஞானேந்திரியங்களின் மூலமாய்ப் பற்றின்றி அநுபவித்துக்கொண்டு, பிராரப்தத்தை யொழித்து நைஷ்கர்மியத்துவத்தை யெய்தியது தான் கற்களைத்தூளாக்கித்தின்றதன் தத்துவமாம்.

சைலாதர்:—சுத்த அந்தக்கரணத்தொடு கூடிய ஜீவனிடத்தில் தோன்றிய தீவிரதரமுமுக்ஷுத்தன்மை; அதாவது பரமாநந்த ஸ்வரூபமோக்ஷத்தையடைய விரும்பும் ஜீவனது இச்சை.

சைலம்(ஶைலம்;)-என்னும் பதம் அக்ஷரஸங்கியையின்படி முப்பத்தைந்தைக் குறிக்கின்றது. ஆகவே பிரிதிவி முதலிய முப்பத்தைந்து தத்துவங்களையும், ஸஹ:— பிரவிலாபனம்செய்து, சிவதத்துவம் ஒன்றனையே அடைய விரும்பும் ஜீவனெனினும் ஒக்கும். சைலாதர் ஸாக்ஷாத் பரசிவனிடத்தில் தீக்ஷையைப்பெற்று "நந்திகேஶ்வரர்" என்னும் தீக்ஷாநாமத்தையும் பெற்று சிவஸ்வரூப ஸாயுஜ்யமெய்தினர். இதுதான் ஸ்வாராஜ்ய பட்டாபிஷேகமென்பது.

சிவகணங்கள்: ஆத்மாபரோக்ஷஜீவன்முத்தர்கள்,
தலைமை: வரிஷ்டபதவி.

இரத்தினவேத்திரம்=ஞானதண்டம்,

ஸ்ரீநந்திகேஶ்வரர் ஸ்வஜை யென்னும் பெண்ணை மணந்தனர். மணத்தின் தத்துவம் ஆத்மப் பிரஹ்மைக்கிய அபரோக்ஷஸாக்ஷாத்காரமேயாகும்.

ஸ்வஜை=தானாய் ஸ்புரித்தவள்; இவள்தான் முக்திகாந்தை. அகண்ட அத்வைத ஆத்மஸ்திதி.

இந்நிலை நித்தியபிராப்தம் அதாவது என்றும் அடையப்பட்டதாயுள்ளதாதலின், வேறொரு ஸாதனத்தால் சித்திக்கின்றதென்பது ஒவ்வாது. எது எது ஸாதனங்களாலடையப்படுமோ அதுவது நாசமுறுமென்பது நியமமாம். இந்தஸ்வஜைவஸிஷ்டரது பௌத்திரியும், வியாஸரது புத்திரியுமாவள். வியாஸ தாத்பரிய நிர்ணயமாகும் அகண்டாத்வைதஸ்திதியே வியாஸரது புத்திரி யென்பதன் தத்துவமாகும்.

ஸ்ரீ நந்திகேஶ்வரரின் திருக்கல்யாணம் பங்குனி மாதம் சுக்கிலபக்ஷ தசமியன்று நடைபெறுவது மிகப் பிரஸித்தமாயிருக்கின்றது.

இதன் தத்துவமாவது:—பங்குனி பன்னிரண்டாவது மாதம். விவேகம், வைராக்கியம், சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, ஸமாதானம், முமுக்ஷுத்துவம், சிரவணம், மனனம், நிதித்தியாஸனம் என்னும் பன்னிரண்டு ஸாதனங்களில் ஒவ்வொன்று ஒவ்வொரு மாதத்திலேற்பட்டுப் பங்குனி மாதத்தில் நிதித்தியாஸன மென்னும் சிறந்த ஸாதனம் ஏற்படுகின்றதென்பது பரமரஹஸ்யமாம்.

சுக்கிலபக்ஷம்—ஸஜாதீயமாகும் ஆத்மகோசர விருத்திகள் பிரவகித்து வளர்ச்சியுறும் நிலை.

தசமி—தசகாரிய மஹா வாக்கிய அநுஸந்தானத்தின் சரம (இறுதிய) வ்ருத்தியோடு கூடிய ஸ்திதி.

பரமேஸ்வரனே நந்திகேஶ்வரரது திருக்கல்யாணத்தைச் செய்துவைத்தனனென்பது புராண வரலாறாகும். இதன் தத்துவமாவது:— ஈஶ்வராநுக்கிரஹமின்றி யாருக்கும் ஆத்மாபரோக்ஷ ஞானமுண்டாகாது. இறைவனது அருளினுற்றான் "அவனேதான்" என்னும் அத்வைத நிலை பெறுவானென்பதேயாகும்.

பரமசிவ ஸந்நிதி—நிதித்தியாஸனம்; நந்திகேஶ்வரர் ஸதா ஸோஹம்பாவனையோடு விளங்குபவர், என்றால், சிவ ஸந்நிதானமாகும் நிதித்தியாஸனத்தினின்றும் எப்பொழுதும் விலகாதவரென்பது பொருள். இஃதன்றியும், நந்தியம் பெருமான் ஸதா கைலாஸத்தின் வாயிலில் காத்துக்கொண்டுமுள்ளவர். கைலாஸமென்றால் ஒரு சிறிதும் துக்கங்கலவாத ஆநந்த கனமாய் விளங்கும் ஸ்தானமென்பது பொருள். அது பிண்டமாகும் சரீரத்தில் பிரஹ்மரந்திரஸ்தானமேயாகும். பிரஹ்மரந்த்ரமாகும் கைலாஸத்தின் வாயில் (துவாரம்) ஆக்ஞையாகும் ப்ருமத்தியஸ்தானமே. இந்த ஸ்தானத்திற்கே குளபதம், கந்தழி யென்னும் நாமாந்தரங்கள் சாஸ்திரங்களில் கேழ்க்கப்படுகின்றன.

இது மானஸ மண்டலமென்று முன்னர் கூறப்பட்டுள்ளது. அந்தக்கரணமே மானஸமண்டலமாம். அந்தக்கரணமானது ஸூக்ஷ்ம பஞ்ச பூதங்களின் ஸத்து.

வாம்சத்தின் தொகுதியேயாகும். வியஷ்டியில் ஒவ்வொரு பூதத்தின் ஸத்துவாம்சம் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், ஹ்ருதயம் அல்லது அந்தரங்கம் என ஐவகைப்படும். இவ்வைந்துந்தான் பஞ்ச ஸூக்ஷ்ம பூதலிங்கங்களாகும். இவற்றுள் இந்த பஞ்சநத க்ஷேத்திரத்தின் அத்தியாத்மதத்துவமாகும் ஆக்ஞாஸ்தானம் சிறப்பு வகையில் ஸூக்ஷ்ம பிருதிவீலிங்கமெனக் கூறப்படும். சுத்த அஹங்காரம் ஸூக்ஷ்மபிருதிவியின் ஸத்துவாம்சமாகும் சுத்த அஹங்காரலிங்கமாமென்பது பரம ரஹஸ்யம்; பராஹந்தாவ்ருத்தியோடு கூடிய நிலை.

ஜப்யேசர்: மந்த்ரேசுவரர்; ஜபிக்கத்தக்க மஹா மந்த்ரத்தினால் பிரதிபாதிக்கப்படுபவர். ஜபிக்கத்தக்க மஹா மந்த்ரம் மஹாவாக்கியமேயாமென்று பெரியோர் கூறுவர். அதனால் உணரப்படும் ஆத்மப்பிரஹ்மைக்கிய ஸ்வரூபமே ஜப்யேசர் என்பதன் தத்துவார்த்தமாகும். "ஶாந்தம்ஶிவமத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:" என்னும் உபநிஷத் பிரமாணத்தின்படி அத்வைத ஸ்வரூபமே சிவஸ்வரூபமாகும்.

ஏகமுக ஸுப்ரஹ்மண்யர்:— ஆத்மப்பிரஹ்மைக்கிய, அகண்டாகார வ்ருத்தியில் அதாவது லக்ஷ்யார்த்த அநுஸந்தானத்தில் ஏகாக்கிரப்பட்டு சலனமின்றி நிலைத்த ஸ்திதி ஏகமுக ஸுப்ரஹ்மண்யஸ்வரூபமாகும். இது பரம ரஹஸ்யமாம். ஆத்மஞானிகள் ஸ்வாநுபவத்தில் உணரக்கூடிய நிலை. நிதித்தியாஸனத்தின் பரிபக்குவ அவஸ்தையே ஸமாதியெனப்படும்.

ஸுப்ரஹ்மண்யர் விசேஷப் பிரஹ்மஸ்வரூபர். விருத்திஞானஸ்வரூபர். இந்த க்ஷேத்திரத்திலுள்ள ஏக

முக ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்குக் கையில் கோதண்டமும் மற்றொரு கையில் பஞ்சபாணங்களும் இருக்கின்றன. இதன் தத்துவமாவது:—

ஆத்ம கோசர விருத்தியோடு கூடிய சுத்த புத்தியே கோதண்டமாகும். பஞ்சதன்மாத்திரைகளே பஞ்ச புஷ்ப பாணங்களாகும். இவ்விரண்டையும் தரித்துள்ள காரணத்தால் அந்தக்கரணத்தையும் பஞ்சஞானேந்திரியங்களையும் தன்வசத்தில் வைத்துக்கொண்டுள்ள நிலை ஸூசிப்பிக்கப்படுகின்றது.

சிவயோகத்தில், ஆத்மாநுஸந்தானம் பாணமாகவும் அகண்டாகாரவிருத்தி தநுஸ்ஸாகவும் விளங்கி ஆத்மாபின்ன பரசிவம் லக்ஷ்யமாகவும் ஸ்புரிப்பது உபநிஷத் ஸித்தாந்தமாம். இந்நிலையை யுணர்த்துவதுதான் தநுஸ் ஸுப்பிரஹ்மண்ய மூர்த்தியின் தத்துவமாமென்று பெரியோர் கூறுவர்.

உத்தர தக்ஷிணகைலாசங்களின் தத்துவம்;—

இடை, பிங்கலை, ஸுஷும்னையென்னும் மூன்று நாடிகளும் ஒன்று சேரும்த்ரிவேணீ ஸங்கமஸ்தானமே புருவநடுவென்னும் ஆக்ஞைபாகும். இடையென்னும் சூர்யநாடியின் நுனியில் விளங்குவது உத்தரகைலாஸமென்றும், பிங்கலையென்னும் சந்திரநாடியின் நுனியில் விளங்குவது தக்ஷிணகைலாஸமென்றும், மத்தியநாடியாகும் ஸுஷும்ணு நாடியின் நுனியில் ஆக்ஞையின் மத்தியில் விளங்குவது மஹாகைலாஸ மென்றும் உபநிஷத்துக்கள் கூறுகின்றன. இந்த ஸ்தலத்தில் மூன்று கைலாஸங்களும் இருக்கின்றன. ஆதலின், இந்த

ஸ்தலம் ஆக்ஞாஸ்தானமென்னும் விஷயம் நன்கு உவி யுறுத்தப்படுகின்றது.

அர்ச்சிராதி மார்க்கமாய் அடையப்படுவது உத்தர கைலாஸமென்றும், தூமாதி மார்க்கமாய் அடையப்படு வது தக்ஷிணகைலாஸமென்றும் கூறப்படும். இவ் விரண்டு ஸ்தானங்களும் மானஸிகமேயாகும். ஆக லின் புனராவ்ருத்தியுடையனவே. மஹா கைலாஸ மொன்றே அமனஸ்க சிவயோகவுணர்ச்சியின் நிலை. இம்மஹா கைலாஸத்தில் விளங்கும் சிவம் "பிரண தார்த்தி ஹரன்" எனப்படுவர். ஜீவர்களின் சோகத்தை யடியோடு ஒழிப்பவர். பஞ்சாபகேசன் (பஞ்சநதேஸ் வரன்) ஜப்யேசன், பிரணதார்த்திஹரன் என்னும் மூன்று நாமங்களும் சிறந்த அர்த்தத்தோடு விளங்குவ தனுல் அவை மஹாமந்த்ரங்களாகும். இந்நாமங்களின் ரஹஸ்யதத்துவத்தை அநுஸந்தானம் செய்பவர்கள் அந் நாமாக்களின் லக்ஷ்யார்த்த வடிவ சிவத்தைத் தாமாக வுணர்வது நிச்சயம்.

பஞ்சாபகேசன்:—பஞ்சநதேஶ்வரன். ஐந்து சிறுநதிகளால் கூட்டப்பட்ட ரஹஸ்யஸ்தானமாகும் ஆக்ஞையில் விளங்கும் சிவம்; ஸ்வரூபநாசமாய் சுத்த ஸத்வப்பிரதானமாயுள்ள அகண்டாகார விருத்தியில் ஸ்புரிக்கும் சிவம்.

ஜப்யேசன்;—ஜபிக்கப்படுவது ஜப்யம். மஹா மந்த்ரங்களே ஜப்யங்களாகும். மஹாவாக்கியங்களே சிறந்த ஜப்யங்கள். மஹாவாக்கிய அகண்டார்த்தத்தி ஞல் பிரதிபாதிக்கப்பட்ட அத்வைத சிவமே ஜப்யேச னென்னும் நாமாவின் சிறந்த பொருளாகும்.

இந்த க்ஷேத்திரத்தின் ஸ்தல விருக்ஷம் பில்வ விருக்ஷமாகும். இதற்கு ஸ்ரீ விருக்ஷமென்று பெயர். ஸ்ரீ என்றால் மோக்ஷ ஸாம்ராஜ்யமாகும். இந்த விருக்ஷத்திற்கும் மூல லிங்கத்திற்கும் மத்தியில் யாரும் செல்லக்கூடாதென்னும் நிபந்தனை இங்கேயுண்டு.

ஏனெனின், பரமேச்வரனது ஜடைகள் வில்வ விருக்ஷம் வரையில் வியாபித்திருக்கின்றனவென்பது ஐதிஹ்யமாம். ஸவிகல்ப ஸமாதியின் அகண்டவிருத்தி, நிர்விகல்ப ஸஹஜ ஸ்திதியைக் குறிக்கும் ஸ்ரீ விருக்ஷம் வரை வியாபித்து அங்கே உபசமனமாகின்றதென்பது சுருதிக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமானதே யாகும். அகண்டாகார விருத்தியின் உபசமனஸ்தானமே அத்வைத அவஸ்தான வடிவமாம்.

## ஸப்தஸ்தான தத்துவம்.

தஸ்யவாசக: ப்ரணவ: என்னும் பிரமாணத்தின் படி பிரணவம் சிவத்தின் வாசகமாம். அது (பிரணவம்) அகார, உகார, மகார, அர்த்தமாத்திரை, நாதம், பிந்து, உன்மனீ என்னும் ஏழு அவயவங்களை யுடையது. இந்த ஏழும் முறையே ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம், துரீயாதீதம், அதிதோதிதம், ஸன்மயம் என்னும் ஏழு அவஸ்தைகளைக் குறிப்பன வாகும். இவ்வெல்லா அவஸ்தைகளிலும் வ்ருத்தி யுண்டு. ஸன்மயத்தில் விருத்தி உபசமனமாய் விடுகிறது. இந்தஸன்மயாவஸ்தையின் நிலையே இந்த பஞ்சநதக்ஷேத்திரத்தின் ஸ்வரூபமாகும்.

## ஸப்த ஸ்தான க்ஷேத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருப்பழனம் | ஜாக்கிரம் | அகாரம் |
| 2. | திருச்சோற்றுத்துறை | ஸ்வப்னம் | உகாரம் |
| 3. | திருவேதிகுடி | ஸுஷுப்தி | மகாரம் |
| 4. | திருக்கண்டியூர் | துரீயம் | அர்த்தமாத்திரை |
| 5. | திருப்பூந்துருத்தி | துரீயாதீதம் | நாதம் |
| 6. | திருநெய்த்தானம் | அதீதோதிதம் | பிந்து |
| 7. | திருவையாறு | ஸன்மயம் | உன்மனீ |

இங்ஙனம் இந்த ஏழு ஸ்தானங்களிலும் அந்த அந்த அவஸ்தைக்குரிய விருத்தியை யுபாதியாய்க் கொண்டு ஒரே அத்விதீய சிவம் விளங்குகின்றது. இந்த உண்மையைத்தான் ஸப்தஸ்தான பல்லக்கு உற்சவம் அறிவிக்கின்றது. பல்லக்குதான் விருத்தி. இந்த தத்துவத்தை யுணர்ந்து, ஸப்த ஸ்தானங்களையும் தரிசித்துக் கடைசியதாய் விளங்கும் ஸன்மயமாகும் உன்மனீஸ்தானத்தையுணராதுணர்ந்து நிற்பவர் இனிப் பிறவாப் பரமுத்தியெய்துவரென்பது திண்ணம். "ஏழூர் சுற்றி என்பேயர் முத்தி" என்று வழங்கும் பழமொழியின் ரஹஸ்யமும் இதுவேயாகும்.

## ஆட்கொண்டார் என்னும் மூர்த்தியின் தத்துவம்.

ஆட்கொள்ளுதல் என்பது ஒருவனது ஜீவபாவத்தினின்றும் நீக்கி, அபயவடிவ சிவபாவத்தை யுணர்த்திக் காத்தலேயாகும். காலம், தேசம் வஸ்துவென்னும் பரிச்சேத வுணர்ச்சி யுள்ளவரை ஜீவ பாவ முண்டு.

காலதேச வஸ்து பரிச்சேத மற்றநிலையே அத்வைத அபயஸ்திதி; ஆட்கொண்டாரது தத்துவம் இந்த அபய நிலையேயாகும். காலனாகும் இயமனை நந்திகேச்வரர் ஸம்ஹரித்ததாகப் புராணம் கூறுகின்றது. ஆதலின் நந்திகேச்வரனே கால கால வடிவ பரமசிவ பாவத்தைப் பெற்றனனென்பது ஸித்தித்தது. க்ஷேத்திரக்ஞன், க்ஷேத்திரபாலகன் என்பனவையும் நந்தியே.

## தர்மஸம்வர்த்தினி.

தர்மாம்பிகை, தர்மஸம்வர்த்தினி என்பவை இந்த க்ஷேத்திரத்திலுள்ள அம்பிகையின் திருநாமங்களாகும் சிவத்தைவிடச் சற்றும் பின்னமில்லாத சித்சக்திக்குத் தர்மம் என்று பெயர். தர்மம் இரண்டுவகை. பிரவிருத்தியொன்று; மற்றொன்று நிவர்த்தி; பாஹ்ய நாட்டத்தால் பிரவிருத்தியும், ஆந்தர நாட்டத்தால் நிவர்த்தியும் ஏற்படுகின்றன, பாஹ்யப்பிரவிருத்தி அசுத்த மனத்திலும், ஆந்தரப்பிரவிருத்தி சுத்த மனத்திலும் ஏற்படும். அறம், பொருள், இன்பங்களென்னும் திரிவர்க்கம் பாஹ்ய பிரவிருத்தியின் பயன்களென்றும் மோக்ஷம் என்னும் அபவர்க்கம் ஆந்தரப்பிரவிருத்தி அல்லது நிவர்த்தியின் பயன் என்றும் சாஸ்திரங் கூறுகின்றன. இவ்விருவகை தர்மங்களையும் வளர்த்து ஜீவர்களுக்கு நித்யாநந்தப்பெருவாழ்வை யளிப்பவள் தர்மஸம்வர்த்தினி அல்லது அறம் வளர்த்த நாயகியே யாகும். இந்த அம்பாளுக்கே ஸாவித்திரி, மனோன்மனி என்னும் இரண்டு திருநாமங்களும் புராணத்தில்

கூறப்பட்டுள்ளன. அம்பாளின் திருவுருவம் நின்ற திருக்கோலம்; நான்கு திருக்கரங்களுண்டு.

அம்ருதகலசம், ஜபமாலை, அபய முத்திரை இவைகள் மூன்று கரங்களில் விளங்குகின்றன. ஒருகரம் (ஊரு நியஸ்தம்) தனது இடது தொடையைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. இந்நான்கு திருக்கரங்களின் தத்துவமாவது;—

| | |
|---|---|
| அபய ஹஸ்தம் | மோக்ஷநிலை |
| ஜபமாலை | மஹாவாக்கிய அநுஸந்தானம் |
| அம்ருதகலசம் | அகண்டாகாரவிருத்தி |
| ஊருநியஸ்தம் | அஹங்கிரஹ உபாசனை |

இங்ஙனம் மேற்கூறிய தத்துவங்களை நன்குணர்ந்து அநுஸந்தானம் செய்யும் ஒவ்வொரு ஜீவனும் சிந்தையும் மொழியும் செல்லாச் சிவனடி நீழலில் இரண்டறக் கலந்தலாகும் மோக்ஷஸாம்ராஜ்பத்தைப் பெறுதல் திண்ணமாம்.

உலகமோ டவற்றி னுறு பொருள் களையும்
உம்பர்போ ற்றிடு மிரு வரையும்
நலமுற வளித் தாங் கன்னியென் றுயர்வாய்
நான்மறை புகன்று நின் றேத்தப்
பலவித தரும மியற்றி யவ் வழியிற்
பயின்றநீ வர்க்கருள் பதித்தே
அலகிலா முத்திப் பேற்றினை யுதவும்
அறம் வளர்த் தவ ளடி பணிவாம்,

பஞ்சநத மேன்னும்

திருவையாற்று க்ஷேத்திரதத்துவம்

முற்றிற்று

ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சகம், காஞ்சிபுரம் 5—49